**அசல் வழக்கு எண்: 630/2022**

The Witness sweared under Oaths Act 1969 on this the day of 13th day of March 2026
வா.சா.1. சம்பத் ரெட்டியார், த/பெ. சென்னப்ப ரெட்டியார்,

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

பெருமாள் ரெட்டியார் என்னிடம் பணம் வாங்கி பிரதிவாதி ராஜேந்திரனிடம் கொடுத்தார். நான் நேரடியாக பிரதிவாதிக்கு பணம் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. பெருமாள் ரெட்டி ராஜேந்திரனுடன் என்னிடம் வந்து பணம் வாங்கி அவரிடம் கொடுத்தார். பெருமாள் ரெட்டி எந்த வருடம் காலமானார் என எனக்கு தெரியாது. இந்த வழக்கு கடன் தொகையை பெருமாள் ரெட்டியிடம் கொடுத்து பிரதிவாதி ராஜேந்திரனிடம் கொடுக்க சொன்னேன். பிரதிவாதி ராஜேந்திரனின் தந்தை பெயர் பச்சையப்பன் ஆகும். வா.சா.ஆ.1 கடனுறுதி சீட்டு 20.08.2016 ம் தேதி எழுதிக்கொடுக்கப்பட்டது ஆகும். நான் அதன் பின்னர் ஒரு வருடம் கழித்து பெருமாள் ரெட்டியாரிடம் சென்று பணத்தை திருப்பி வாங்கி தர கேட்டேன். அதன் பின்னர் அவர் இறந்துவிட்டதால் நான் யாரிடம் சென்றும் கேட்க இயலவில்லை. பெருமாள் ரெட்டியின் மகன் சென்னையில் இருப்பதால் இது குறித்து அவரிடம் கேட்க முடியவில்லை. பொதுவாக பெருமாள் ரெட்டி கந்துவட்டிக்கு கொடுத்த கடன்களை எல்லாம் நான் பலாத்காரமாக வசூலித்து தருவது வழக்கம் என்றால் சரியல்ல. அவ்வாறு நான் கடன் வசூலிப்பது சம்மந்தமாக என்மீது திருவண்ணாமலை குற்றபிரிவில் வழக்கு உள்ளது என்றால் சரியல்ல. தற்போது நீதிமன்றத்திற்கு பெருமாள் ரெட்டியார் மகன் வந்துள்ளாரா என்றால் இல்லை. பெருமாள் ரெட்டியார் நிலத்தில் பிரதிவாதி ராஜேந்திரன் குத்தகைக்கு பயிர் வைத்தார் என்றால் அது எனக்கு தெரியாது. அவ்வாறு பயிர் வைத்து கிடைத்த தொகையை பிரதிவாதி இந்த வழக்கு கடனுறுதிச்சீட்டுக்கள் தேதி போட்டு பெருமாள் ரெட்டியார் வங்கி கணக்கிலேயே வரவு வைக்கப்பட்டுள்ளது என்றால் எனக்கு அந்த விவரம் தெரியாது. அவ்வாறு இந்த வழக்கு கடனுறுதிச்சீட்டுக்களுக்கான தொகையை பைசல் செய்ததற்கான பஞ்சாயத்து நடந்தது நோட்டில் வரவு வைக்கப்பட்டதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யலாமா என்றால் இது சம்மந்தப்பட்ட பரிவர்த்தனை என்றால் தாக்கல் செய்யலாம். பிரதிவாதி ராஜேந்திரன் அலைபேசி எண் எனக்கு தெரியாது. நான் இதற்கு முன்னர் பிரதிவாதியின் அலைபேசியில் அவருடன் பேசியது கிடையாது என்றால் சரிதான். நானும் பெருமாள் ரெட்டியாரும் தூரத்து உறவினர்கள் ஆவோம். பெருமாள் ரெட்டியார் ஊரில் வட்டிக்கு

பணம் கடன் கொடுக்கும் தொழில் செய்தார் என்றால் எனக்கு அது தெரியாது. அது சம்மந்தமாக ஆவணங்கள் இருந்தால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யலாம். இந்த வழக்கு கடனுறுதிச்சீட்டுக்கள் சம்மந்தமாக யார் பஞ்சாயத்து செய்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது. இந்த வழக்கு கடனுறுதிச்சீட்டுக்களில் பெருமாள் ரெட்டியாரும், ஜெயகோபி என்பவரும் சாட்சி கையெழுத்து செய்துள்ளார்கள். ஜெயகோபிக்கும் எனக்கும் எந்த உறவும் கிடையாது. அவர் எனது சமூதாயத்தை சேர்ந்தவர் என்றால் சரிதான். தாவா கடனுறுதிச்சீட்டுக்களில் சாட்சி கையெழுத்து செய்தவர்கள் யாரும் எங்கள் ஊரை சேர்ந்தவர்கள் கிடையாது என்றால் சரிதான். தாவா கடனுறுதிச்சீட்டுக்களை அண்ணாமலை என்பவர் எழுதினார். அவரும் எங்கள் ஊரை சேர்ந்தவர் கிடையாது என்றால் சரிதான். தாவா கடனுறுதிச்சீட்டுக்கள் ஒரே தேதியில் எழுதப்பட்டவை கிடையாது என்றால் சரிதான். ஜெயகோபி என்பவர் இதே நீதிமன்றத்தில் வேறு ஒரு வழக்கான அசல் வழக்கு எண் 632/2025 ல் இந்த கடனுறுதிச்சீட்டுக்கள் வெற்று பாண்டு என சாட்சி சொல்லியுள்ளார் என்றால் எனக்கு அது தெரியாது. நான் உண்மையில் பணம் கொடுக்காவிட்டால் இஸ்ரோ செயற்கைகோளில் பதிவாகியிருக்கும் என்றும் அவ்வாறு பதிவு இல்லாவிட்டால் என்மீது குற்றவியல் நடவடிக்கை எடுக்கலாமா என்றால் எடுக்கலாம். தாவா கடனுறுதிச்சீட்டுக்கள் மூன்றிலும் ஒரே நபர்கள் எவ்வாறு சாட்டி கையெழுத்து போட்டுள்ளார்கள் என்றால் பிரதிவாதி தான் அவர்கள் மூவரையும் அப்போது அழைத்து வந்தார். கடனுறுதிச்சீட்டுக்களை நான் எழுதவில்லை. அந்த மூன்று நாட்கள் கடனுறுதிச்சீட்டுக்கள் எழுதிய போதும் அவர்கள் பூர்த்தி செய்த கடனுறுதிச்சீட்டை என்னிடம் கொண்டுவந்தார்கள். மேற்கண்ட அசல் வழக்கு எண் 632/2025 ல் ராமதாஸ் என்பவர் நான் வெற்று பாண்டு கொடுத்து என் பெயரில் வழக்கு தாக்கல் செய்து அதை பஞ்சாயத்து செய்து தீர்த்து கொள்வதாக நாங்கள் தெரிவித்ததாக சாட்சி சொல்லியுள்ளர் என்றால் எனக்கு அது தெரியாது. எனக்கும் பெருமாள் ரெட்டியர் மகன் பிரபுவிற்கும் அடிக்கடி என்னை நீதிமன்றத்திற்கு செல்வதற்கு சம்மந்தமாக தகறாறு ஏற்படும் என்றால் சரியல்ல. அவர் சொல்லி தான் நான் இந்த நீதிமன்றத்தில் பொய்யாக சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. என்னை நீதிமன்றத்திற்கு 2 முறை தேவா என்பவர் கூட்டி வந்தார். அதன் பின்னர் நான் வயதானதால் ஆள் துணையுடன் வருகிறேன். பரிக்கல்பட்டியில் இந்த வழக்கு கடனுறுதிச்சீட்டு சம்மந்தமாக பஞ்சாயத்து செய்யப்பட்டு

அதில் பெருமாள் ரெட்டியார், பாண்டு , மோகன் , பச்சியப்பன், ஜெயகோபி, சுகுமார், வேலு மற்றும் ரவி ஆகியோர் கையெழுத்து போட்டுள்ளார்கள் என்றால் எனக்கு அது தெரியாது. அசல் வழக்கு எண் 632/2025 ல் பிரதிவாதி தான் பெருமாள் ரெட்டியாரிடம் வெற்று பாண்டு பேப்பரில் கையெழுத்து போட்டு கொடுத்திருப்பதாக எதிர்வழக்குரை தாக்கல் செய்து அந்த வழக்கில் சாட்சியும் சொல்லியுள்ளார் என்றால் எனக்கு அது தெரியாது. அதே போல் பாண்டு என்பவரிடமும் 3 வெற்று பாண்டு இருப்பதாக சாட்சி சொல்லியுள்ளார்கள் என்றால் எனக்கு தெரியாது. பெருமாள் ரெட்டியார் வீட்டிற்கு நான் அடிக்கடி செல்லும் பழக்கம் உள்ளது என்றால் சரியல்ல. தேவைப்பட்டால் செல்வேன். பிரதிவாதி தரப்பினர் வயலில் கொத்தடிமையாக வேலை செய்ததை ரிலீஸ் செய்து தாசில்தார் விசாரணை நடத்தி உத்தரவு போட்டதில் நான் சாட்சி கையெழுத்து போட்டுள்ளேன் என்றால் எனக்கு அப்படி எதுவும் ஞாபகம் இல்லை. முதல் கடனுறுதிச்சீட்டு எழுதப்பட்ட பின்னர் 3 மாதங்கள் கழித்து 2ம் கடனுறுதிச்சீட்டு எழுதப்பட்டது. அதன் பின்னர் 10 மாதங்கள் கழித்து 3ம் கடனுறுதிச்சீட்டு எழுதப்பட்டது. இந்த வழக்கு கடனுறுதிச்சீட்டுக்கள் சம்மந்தமாகவும் தாசில்தார் ரிலீஸ் உத்தரவில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் எனக்கு அது தெரியாது. நான் இந்த வழக்கு கடனுறுதிச்சீட்டுகளில் பெருமாள் ரெட்டியாரிடம் கடனாளியாக கையெழுத்து வாங்கவில்லை என்றால் சரிதான். நான் பெருமாள் ரெட்டியாரிடம் தான் தொகை கொடுத்தேன் என்று கூறுவதால் அவரிடம் தான் நான் கடனை திருப்பி கேட்க வேண்டும் என்றால் சரியல்ல. அவரிடம் உள்ள வெற்று பாண்டு பேப்பர்களை பெற்று இந்த வழக்கில் பிரதிவாதிக்கு எதிராக பொய்யாக தாக்கல் செய்துள்ளதால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முழுமையாக முடிக்கப்பட்டது. மறு விசாரணை இல்லை.**

| | |
|---|---|
| சாட்சியின் கையொப்பம் | திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சியால் சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையொப்பம் செய்தார்<br><br>Sd/– S. Senthilbabu,<br>சார்பு நீதிபதி,<br>போளூர். |